# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 3.4.2026 | காலை 11 மணி | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை |
| ” | மாலை 4.00 மணி | ” | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் |
| ” | இரவு 8.00 மணி | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 4.4.2026 | காலை 11.00 மணி | திருச்சி தெற்கு | மணப்பாறை |
| ” | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| ” | மாலை 6.00 மணி | கரூர் | குளித்தலை |
| ” | இரவு 8.00 மணி | ” | கிருஷ்ணராயபுரம் |
| 5.4.2026 | காலை 11.00 மணி | திருப்பூர் கிழக்கு | காங்கேயம் |
| ” | மாலை 4.00 மணி | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| ” | மாலை 6.00 மணி | கோவை தெற்கு | சூலூர் |
| 5.4.2026 | இரவு 8.00 மணி | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் |
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளராக எஸ்.அரவிந்த்ரமேஷ் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் ஜி.பி.ஜனராஜன் திருமண மண்டபத்தில் 30.03.2026 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நா.சந்திரபாபு மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழகத்தின் மாவட்ட கழக செயலாளர்கள் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

## சைதை மேற்குப் பகுதி

# 142 ‘அ’ வட்டத்தில் வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வாக்குச் சேகரிப்பு!

### வட்டச் செயலாளர் எஸ்.பி.கோதண்டம் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.3

சைதை மேற்குப் பகுதி 142வது (அ) வட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வேட்பாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். இந்த நிகழ்ச்சியில் வட்ட கழகத்தினர் பங்கேற்றிடுமாறு வட்டச் செயலாளர் எஸ்.பி. கோதண்டம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், இன்று (03.04.2026 வெள்ளிக்கிழமை) அன்று வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க உள்ளார்.

காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுப்பிரமணிய சுவாமி கோவில் அருகில் தொடங்கி, அதன் தொடர்ச்சியாக ஒத்தவாடை தெரு, கே.பி.கோயில் தெரு, வி.எஸ். முதலி தெரு, சுப்பிரமணிய முதலி தெரு, குளக்கரை தெரு, காரணீஸ்வரர் கோயில் தெரு, பிராமின் தெரு வழியாக, சௌந்தேரேஸ்வரர் கோவில் தெரு, மாரி ஓட்டல் வழியாக வி.எஸ்.முதலி தெரு, சுப்பிரமணிய சுவாமி கோவில் கிழக்கு தெரு, வரசித்தி விநாயகர் கோவில் தெரு, சுப்பிரமணிய சுவாமி கோவில் மேற்கு தெரு, செம்பட தெரு, ஜெயராம் செட்டி தெரு, பெருமாள் கோயில் தெரு, தெற்கு கவரைத் தெரு, பெருமாள் கோயில் குளம், மற்றும் கோவில் சுற்றி அதன் வழியாக, இளையாழ்வார் கோவில் தெரு, ரங்கபாஷ்யம் தெரு, ரங்கபாஷ்யம் சந்து, கவரை தெரு வழியாக, திவான்பாஷ்யம் தெரு, வாணியர் தெரு, கடும்பாடி அம்மன் கோவில் வழியாக, மேற்கு ஜோன்ஸ் ரோடு, தாடி ரத்தினம் தெரு, கம்பர் தெரு, திருவள்ளுவர் தெரு,

கோடம்பாக்கம் சாலை வழியாக, நடராஜன் தெரு, சைதை சம்பந்தம் தெரு, ஏழுமலை தெரு, காமகோடி தெரு, பாலகிருஷ்ணன் தெரு, ஆதிகேசவன் தெரு, குமாரசாமி தெரு, முனுசாமி தெரு, ராமசாமி தெரு, சுப்பிரமணிய சாலை வழியாக முடிவடைகிறது. மதிய உணவு நிறைவுக்கு பிறகு மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை ஜோன்ஸ் சாலை பெட்ரோல் பங்க் அருகில் தொடங்கி அதன் வழியாக கே.பி. கார்டன் 3, 2வது தெரு வழியாக, சேஷாச்சலம் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு சந்து, பாலாசிங் தெரு, குயவர் வீதி, கிழக்கு ஜோன்ஸ் ரோடு வழியாக பவளவண்ணன் சுரங்க பாதை, சர்வீஸ் சாலை, ஜீனிஸ் சாலை, தர்மராஜா கோவில் தெரு, ஜீர் சந்து, விஜிபி சந்து வழியாக, பஜார் ரோடு, மாதா சர்ச் ரோடு, பூக்காரத் தெரு பின்புறம், மீண்டும் பஜார் சாலை வழியாக ஜெயராம் தெரு, ஜெயராம் சந்து, மார்க்கெட் ரோடு, குருநாத் ஸ்டோர் அருகில் நிறைவு பெறுகிறது.

எனவே மேற்கண்ட வாக்கு சேகரிப்பு நிகழ்விற்கு 142வது (அ) வட்டத்தை சார்ந்த அனைத்து கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தருமாறு 142வது (அ) வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக போட்டியிடும் தேமுதிக வேட்பாளர் அனகை டி. முருகேசனை ஆதரித்து மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்எல்ஏ வார்டு வார்டாகச் சென்று ஆதரவு திரட்டினார். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.




சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி போரூர் நாற்சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலைஅணிவித்து மரியாதை செலுத்திவிட்டு நொளம்பூரில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் வேட்புமனுவினை தாக்கல் செய்தார். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதச்சாற்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள்.கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கல்லணை காத்தான்

### ஏப்ரல் 3 (2005)



தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.

ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

# மயிலை கிழக்கு பகுதி 124, 124 அ வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

*சென்னை, ஏப். 2-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி 124, 124 அ வட்டத்தில் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு*

*இன்று (03.04.2026 - வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.*

*மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட ,பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO,BDA மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*வாக்கு சேகரிக்கும் இடங்கள் :*

*காலை 8 மணியளவில் சத்தியவாணி முத்து நகர், சாரதாபுரம், விசிகார்டன், லாலா தோட்டம், கச்சேரி ரோடு, மாலை 4 மணியளவில் மயிலாப்பூர் குளம் அருகே, தேர்தல் பணிமனை திறப்பு, தெற்கு மாட வீதி வழியாக, சித்திரை குளம், புது தெரு, தாச்சி அருணாச்சலம் தெரு, ஆபிரகாம் தெரு, மசூதி தெரு, டி எஸ் வி கோயில் தெரு, பிச்சிப்பிள்ளை தெரு,*

*ஆதாம் தெரு, மந்தைவெளி தெரு, மந்தவெளி மார்க்கெட் முடிவடைதல்*

*இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிக்கை விடுத்துள்ளார்.*

## ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

# 113 (அ) வட்டத்தில் தேர்தல் பணிமனை திறப்பு!

### வட்டச் செயலாளர் த.தேவராஜ் அறிக்கை!

*சென்னை, ஏப்.2-*

*ஆயிரம் விளக்கு 113 (அ) வட்டச் செயலாளர் த.தேவராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*113 வது (அ) வட்டத்தில் இன்று (0342026, வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் தர்மாபுரம் மெயின் ரோடு வட்டக் கழக அலுவலகத்தில் தேர்தல் பணிமனை திறந்து வைத்து, அனைத்து தெருக்களிலும் வீடு, வீடாக சென்று ஆயிரம் விளக்கு தொகுதி வெற்றி வேட்பாளர் டாக்டர் நா.எழிலன் வாக்கு சேகரிக்க வருகை தர உள்ளார்கள்.*

*தர்மாபுரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வட்ட கழக அலுவலகத்திலிருந்து மக்களிடம் சென்று வாக்கு சேகரிப்பு துவங்கவுள்ளது. ஆகவே வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அனிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, கழக உடன் பிறப்புகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்மாறு வட்டச் செயலாளர் த.தேவராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. மாதவன்

### ஏப்ரல் 3 (2018)



திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கியக் காரணமாக இருந்தவர்.

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறைகளின் அமைச்சராகப் பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.